[12th March 1966

முதலீடு செய்கின்ற விதத்திலும் சட்ட விதிகளைத் திருத்தி அரசாங்கமே அந்த நகைகளை எடுத்துக் கொள்ளுவதற்கு ஏதாவது முயற்சி செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : யாருக்கும் சொந்தமாகிவிடுகிறது என்பது அல்ல. இப்பொழுது இருக்கக்கூடிய சட்டப்படி அந்த நகைகளை ஏலம் போடவேண்டும். அம்மாதிரி ஆக்ஷன் போட்டால் தான் அதில் இருக்கக்கூடிய தங்கத்திற்குக் கிடைக்கக் கூடிய விலையை விட அந்தப் பொருளுக்கு அதிகமான விலை கிடைக்கும். அந்த நகைளை தங்கமாக மாற்றி ஏலம் போட்டால் அடகு வைத்திருப்பவர்களுக்கு நஷ்டம் வரக்கூடும். ஆகவே, அடகு வைத்திருப்பவர்களுக்கு நஷ்டம் வரக் கூடாது என்ற கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : தங்கமாக மாற்றி முதலீடு செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தங்க நகைகளை அப்படியே இருக்கிற விதத்திலேயே கொடுத்தால் பல ஆண்டுகளுக்குப் பிறகு அவைகள் கொடுத்த மாதிரியே திருப்பிக் கொடுக்கப்படும் என்று பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. இரண்டில் எது சரி ?

கனம் திரு. வெ. ராமையா : நகைகளாகக் கொடுத்தால், அதே நகைகள் திருப்பிக் கொடுக்கப்படும் என்பது அல்ல. அவைகளில் இருக்கக்கூடிய தங்கத்தைத் தான் திருப்பிக் கொடுப்பார்கள்.

அக்கினி ஆற்றுப் பாசனம்

*264 கேள்வி—**திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அக்கினி ஆற்றுப் பாசனத்தை இன்னும் விஸ்தரிக்கும் செயற் குறிப்புகள் ஏதேனும் பரிசீலனையில் உள்ளனவா?

THE HON. SRI V. RAMAIAH : No Sir.

திரு. பி. முருகையன் : அக்கினியாறு திட்டத்தில் இடையிலே அந்த ஆறு வருகிற பகுதியிலே சில குளங்கள் விட்டுப் போயிருக்கின்றன. அந்தக் குளங்களுக்குத் தண்ணீர் கொடுப்பது பற்றி மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : புதியதாக விஸ்தரிக்கும் திட்டம் இருக்கிறதா என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். இல்லை என்று பதில் சொன்னேன். இப்பொழுது இந்தத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக இருக்கக்கூடிய காரணத்தினால், உபரித் தண்ணீரை விடப்பட்ட குளங்கள், கண்மாய்கள், ஏரிகளுக்குக் கொடுக்க முடியுமா என்பதுபற்றி ஸ்தலத்தில் இருக்கக்கூடிய என்ஜினியர்கள் பரிசீலனை செய்கிறார்கள்.